# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01 ஆம் திகதிய* பகுதி II இற்குக் குறைநிரப்பி

(*2014. 08. 04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது*)

# உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை :** *ரூபா 3.00* **தபாற் செலவு :** *ரூபா 5.00*

### *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினை அப்பிரிவிற்கான காப்புவாசகத்தை நீக்குவதன் மூலம் திருத்துகின்றது என்பதுடன், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற்கு செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவாந்தன்மையுடையதுமாகுமென்பதுடன், அத்தகைய நீக்கத்திற்கான சட்டப்பயனானது, விடயத்திற்கேற்ப, மாநகர சபை, நகரசபை அல்லது பிரதேச சபைக்கான வரவு செலவுத் திட்டமொன்றை அல்லது குறைநிரப்பு வரவு செலவுத் திட்டம் ஒன்றை மீளச் சமர்ப்பிக்கும்போது அத்தகைய திருத்தங்களுக்கு முன்னர் மாநகர சபையினால், நகரசபையினால் அல்லது பிரதேச சபையினால் பின்பற்றப்பட்ட நடவடிக்கை முறையை மீளக் கடைபிடிப்பதற்கானதுமாகும்.*

## உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

ச.வ.ஓ. 3 /2014

### 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

*1*. இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

*2*. 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவானது அப்பிரிவின் காப்புவாசகத்தை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*3*. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்